සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

නිවාස හා සමාජ සුබසාධන අමාත්‍යාංශය
வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு
MINISTRY OF HOUSING AND SOCIAL WELFARE

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/MF/WE/2018
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........
දිනය / திகதி / Date: 2018.11.29

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருபம்- 2018/13

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும்.

## 2018 ஆம் ஆண்டுக்கு சமுர்த்தி வங்கியின் பங்காளர்களுக்கு பங்கிலாபம் வழங்கல்

**01. அறிமுகம் -**

சமுர்த்தி வங்கி முகாமைத்துவ சபையின் 2018/44/77 இலக்க தீர்மான கட்டளைகளுக்கு அமைய சமுர்த்தி வங்கியின் அங்கத்தவர்களுக்கு விசேட பங்கிலாபம் வழங்கப்படவுள்ளது. அதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டே இச்சுற்றுநிருபம் வெளியிடப்படுகிறது.

**02.** பங்கிலாபம் வழங்குதல்

சமுர்த்தி வங்கியில் 2018.01.01 ஆம் திகதியில் ரூபா 500/= பெறுமதியான பங்குகளை பூர்த்தி செய்துள்ள பங்காளர்களுக்கு கீழ்வரும் நியதிகளுக்கு அமைய 5% பங்கிலாபம் வழங்க முடியும்.

I. 2017.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் வங்கி இலாபம் உழைத்திருத்தல் வேண்டும்.

II. 2017.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் பங்காளருக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபக் கணக்கில் ஒதுக்கிவைத்த நிதியில் 2018.01.01 ஆம் திகதியில் பூரணப்படுத்தியுள்ள பங்குகளுக்கு 5% பங்கிலாபம் வழங்குவதற்கு போதுமான நிதி இருத்தல் வேண்டும்.

III. வைப்புக்கள் , கடன்கள் மற்றும் முதலீடுகளின் ஆள்சார் பேரேட்டு பரீட்சை மீதிகள் பொதுப்பேரேட்டு மீதியுடன் சமப்படல வேண்டும்.

IV. 2018 ஆம் ஆண்டில் பங்கிலாபம் ஏற்கனவே வழங்கப்படாமல் இருத்தல் வேண்டும் (கடந்த காலங்களில் வழங்கப்படாத பங்கிலாபங்களை கருத்தில் கொண்டு)

**03.** கடந்த ஆண்டு அல்லது முந்திய ஆண்டுகளில் அனுமதி வழங்கப்பட்ட நிதிக்கூற்றுக்கு அமைய பங்காளர்களுக்கு வழங்க வேண்டிய பங்கிலாபக் கணக்கில் உள்ள நிதியத்தினை பயன்படுத்தி 5% க்கு குறையாத பங்கிலாபத்தினை வழங்க முடியுமாயின் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

**04.** மேற்படி இலக்கம் 2 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தாத வங்கிகள் 5% வருடாந்த வட்டியினை அங்கத்தவர்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**05.** எமது ஆலோசனைகளுக்கு அமைவாக பங்கிலாபம் வழங்கவுள்ள வங்கிகள் அதனை தனது வங்கியின் கட்டுப்பாட்டு சபைக்கு முன்வைத்து அதற்கான அனுமதியினைப் பெற்று 2018.12.25 ஆம் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**06.** பங்கிலாபம் அல்லாது பங்கு வட்டியினை வழங்கும் போது நெறிப்படுத்தல் ஆலோசனை இலக்கம் 12 மற்றும் அதன் இணைப்புகள் , ஏனைய ஆலோசனைகளை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

**07.** இவ் ஆலோசனைகளுக்கு அமைவாக ஏனைய ஒதுக்கங்களில் உள்ள நிதியத்தினை பாவிப்பதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

நிமல் கொட்டவல கொதர
பணிப்பாளர் நாயகம் (ப.க)

பிரதி –

01. மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட மேலதிக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
02. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காக
03. சகல பிரதேச செயலாளர்களுககும் - தகவலுக்காக
04. பிரதம உள்ளக கணக்காளர்கள் , ச.அபி.திணைக்களம் - தகவலுக்காக

Translated By – I . Aliyar